DEPOSITION OF WITNESS

**In the Court of II Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No:222/2021**
**Present – S.Gopinathan, B.Sc.,B.L.,**
**II Additional District and Sessions Judge, Tiruchirappalli.**
Prosecution witness - 7 (LW -9)
(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திருமதி.ஜெயலெட்சுமி | Caste | : | |
| Father Name | : | திரு.ஜெயராமன் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **14.11.2025.**

**PW - 7 (LW -9 )**

(2, 3 எதிரிகள் ஆஜர். மற்ற எதிரிகள் ஆஜர் இல்லை. பிரிவு 355 பிஎன்எஸ்எஸ் மனு அனுமதிக்கப்பட்டது.) (சாட்சி அவருடைய ஆதார் அட்டை மற்றும் சம்பந்தப்பட்ட போலிசார் மூலம் அடையாளம் காணப்பட்டார்.)

**முதல் விசாரணை:**

நான் தற்போது திருவெறும்பூர் வட்டம், கிழக்குறிச்சி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2017-ம் வருடம் திருச்சி டவுன், கிழக்கு கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தேன். கடந்த 18.09.2017-ம் தேதி இரவு 11.00 மணியளவில் கோட்டை காவல் நிலையத்தில் இருந்து தகவல் கொடுக்கப்பட்டதன் பேரில் நானும், எனது உதவியாளர் அடைக்கலராஜ் ஆகியோர்கள் காவல் நிலையம் சென்றோம்.

அப்போது காவல் ஆய்வாளர் ஜெகன் மற்றும் வடிவேல் ஆகியோர்களிடம் எங்கள் முன்பாக விசாரித்து ஒப்புதல் வாக்குமூலம் வாங்கினார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், எனது உதவியாளரும் கையொப்பம் செய்தோம். 19.09.2017-ம் தேதி காலை 05.30 மணியளவில் எதிரி வடிவேல் என்பவர் சஞ்சீவி நகர் வாய்க்கால் பாலம் அருகில் உள்ள முட்புதரில் பச்சை நிற

II ADJ COURT, TRICHY

வேஷ்டி சிவப்பு கலர் பார்டருடன், கட்டம் போட்ட சட்டை, ஜீன்ஸ் பேண்ட், ஒரு கத்தி ஆகியவற்றை எடுத்து ஆஜர் செய்தார். அதை ஆய்வாளர் மகஜரில் கைப்பற்றினார். அதற்கு நாங்கள் சாட்சியாக கையெழுத்து செய்தோம். வடிவேல் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். அது **அ.த.சா.ஆ.4** ஆகும். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். அது **அ.த.சா.ஆ.5** ஆகும்.

26.09.2017–ம் தேதி காலை 09.00 மணியளவில் கோட்டை காவல் நிலையத்தில் இருந்து தகவல் வந்ததன் பேரில் நானும், எனது உதவியாளரும் அங்கு சென்றோம். அப்பொழுது எங்கள் முன்பாக சுந்தர் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். அதில் நாங்கள் சாட்சி கையெழுத்து செய்தோம். என்னுடைய சாட்சி கையெழுத்து **அ.த.சா.ஆ.6** ஆகும்.

27.09.2017 அன்று மதியம் 02.30 மணியளவில் மீண்டும் கோட்டை காவல் ஆய்வாளர் எங்களை அழைத்ததன் பேரில் சென்றோம். கார்த்திக் (எ) பல் கார்த்திக்கை எங்கள் முன்பு விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். அதற்கும் நாங்கள் சாட்சியாக கையெழுத்து செய்தோம். என்னுடைய சாட்சி கையெழுத்து **அ.த.சா.ஆ.7** ஆகும். பிறகு 03.30 மணியளவில் சஞ்சீவி நகர் வாய்க்கால் முட்புதரில் எதிரி கார்த்தி ஒரு கத்தியை எடுத்து கொடுத்தார். அதை ஆய்வாளர் மகஜரில் கைப்பற்றினார். அதில் உள்ள எனது சாட்சி கையெழுத்து **அ.த.சா.ஆ.8** ஆகும்.

28.09.2017 அன்று மீண்டும் எங்களை மாலை 06.30 மணிக்கு கோட்டை காவல் ஆய்வாளர் சாட்சியாக இருக்க அழைத்தார். அங்கு கௌதம் என்ற எதிரியை எங்கள் முன்பு விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். அந்த வாக்குமூலத்தில் என்னுடைய கையெழுத்து **அ.த.சா.ஆ.9** ஆகும். பின்பு 08.30 மணியளவில் சஞ்சீவி நகர் வாய்க்கால் முட்புதரில் ஒரு கத்தியை எடுத்து ஆஜர்படுத்தியதை ஆய்வாளர் கைப்பற்றினார். அந்த மகஜரில் உள்ள என்னுடைய கையெழுத்து மட்டும் **அ.த.சா.ஆ.10** ஆகும்.

HADURCOURTRICHY

MADRAS HIGH COURT AUTHORITY



**(மேற்படி முதல் விசாரணை அரசு தரப்பில் விசாரித்தது இந்த நீதிமன்றத்திற்கு திருப்தி அளிப்பதாக இல்லை)**

**நீதிமன்ற விசாரணை**.

ஜெகன் என்பவருக்கு ஜெகதீஸ் என்ற பெயரும் உண்டு. வடிவேல் என்பவர் ஆஜர் செய்த ஆடைகளிலும், கத்தியிலும் ரத்தகறை படிந்து இருந்தது.

**எ.த.கு.வி:**

| | |
|---|---|
| **கேள்வி** | நீங்கள் விஏஓ–வாக எப்பொழுது பணியில் சேர்ந்தீர்கள்? |
| **பதில்** | 07.03.2008 |
| **கேள்வி** | நீங்கள் இதுபோன்று குற்ற வழக்குகளில் சாட்சியம் சொல்லியுள்ளீர்கள் என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | 1, 2 எதிரிகளை விசாரிக்க போவதாக உங்களை ஆய்வாளர் அழைத்த தேதி, மணி என்ன? |
| **பதில்** | 18.09.2017 அன்று இரவு 11.00 மணிக்கு அழைத்தார்கள். |
| **கேள்வி** | அப்பொழுது நீங்கள் எங்கு இருந்தீர்கள்? |
| **பதில்** | என்னுடைய சொந்த வீடு ஏர்போர்ட்டில் அருகில் இருக்கிறது. அங்குதான் இருந்தேன். |
| **கேள்வி** | உங்கள் பணி நேரம் என்ன? |
| **பதில்** | காலை 10.00 முதல் மதியம் 01.00 மணி வரை அலுவலக பணி. அதன் பிறகு களப்பணி ஆற்றுவோம். எங்கள் பணி 24 மணி நேர சேவை ஆகும். பணி இல்லாவிட்டால் பொதுவாக 08.00 மணிக்கு வீட்டிற்கு சென்றுவிடுவோம். |
| **கேள்வி** | பணி சம்பந்தமாக வெளியில் சென்றால் உயர் அதிகாரிகளுக்கு தகவல் கொடுக்க வேண்டும் என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | இந்த வழக்கில் அந்த மாதிரி எழுத்து பூர்வ அனுமதி பெற்றீர்களா? |
| **பதில்** | இல்லை. |
| **கேள்வி** | உங்கள் வீட்டிற்கும், காவல் நிலையத்திற்கும் இடையே எவ்வளவு தூரம்? |
| **பதில்** | 7 கி.மீ தூரம் இருக்கும். 30 நிமிடங்களில் இரு சக்கர வாகனத்தில் |

| | |
|---|---|
| | சென்றுவிடலாம். |
| **கேள்வி** | உங்களிடம் என்ன சொல்லி காவல் நிலையத்திற்கு அழைத்தார்கள்? |
| **பதில்** | கொலை வழக்கு சம்பந்தமாக விசாரணை தொடர்பாக. |
| **கேள்வி** | உங்கள் உதவியாளருக்கு தகவல் கொடுத்தது நேரடியாக தெரியுமா? |
| **பதில்** | யார் கொடுத்தார்கள் என்று நேரடியாக தெரியாது. |
| **கேள்வி** | நீங்கள் எத்தனை மணிக்கு காவல் நிலையம் சென்றீர்கள்? |
| **பதில்** | இரவு 11.30 |
| **கேள்வி** | நீங்கள் சென்ற பொழுது அங்கு உங்களது உதவியாளர் இருந்தாரா என்றால்? |
| **பதில்** | இருந்தார். |
| **கேள்வி** | நீங்கள், உங்கள் உதவியாளர் தவிர வேறு யார் காவல் நிலையத்தில் இருந்தார்கள்? |
| **பதில்** | போலீசார் 4 பேர் இருந்தார்கள். |
| **கேள்வி** | அந்த கோட்டை காவல் நிலையத்தில் சிசிடிவி கேமரா பொருத்தப்பட்டிருக்கும் என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | காவல் நிலையத்தில் சுமார் எவ்வளவு நேரம் இருந்தீர்கள்? |
| **பதில்** | கொஞ்ச நேரத்தில் அங்கு இருந்து என்னை அழைத்து சென்றார்கள். நான், எனது உதவியாளர், ஆகியோர் ஆய்வாளருடன் ஒரே ஜீப்பில் சென்றோம். |
| **கேள்வி** | எங்கு சென்றீர்கள்? |
| **பதில்** | சஞ்சீவி நகர். |
| **கேள்வி** | சஞ்சீவி நகர் என்பது பைபாஸ் ரோட்டிற்கு வெளியில் உள்ளது என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | சஞ்சீவி நகரை தாண்டி சென்னை–திருச்சி பைபாசில் மேற்கு பக்கத்தில் இருந்தீர்கள் என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | அங்கு எவ்வளவு நேரம் இருந்தீர்கள்? |
| **பதில்** | சுமார் ஒரு மணி நேரம் இருந்தோம். |
| **கேள்வி** | அந்த ஒரு மணி நேரத்தில் அந்த ரோட்டில் உங்களை தவிர வேறு யார் யார் இருந்தார்கள்? |

| | |
|---|---|
| **பதில்** | 1–வது எதிரி, 4–வது எதிரியை அழைத்து வந்தார்கள். |
| **கேள்வி** | அவர்களை எங்கிருந்து அழைத்து வந்தார்கள் என்றால்? |
| **பதில்** | எங்கிருந்தோ அழைத்து வந்தார்கள். |
| **கேள்வி** | அவர்கள் உங்களிடம் பேசினார்களா? |
| **பதில்** | எங்களிடம் பேசவில்லை. |
| **கேள்வி** | நான் சென்னை–திருச்சி பைபாஸ் ரோட்டிலேயே இருந்தேன் என்றால்? |
| **பதில்** | சரிதான். ஆய்வாளரும் எதிரிகளும் எங்கோ சென்று பொருளை எடுத்து வந்தார்கள். |
| **கேள்வி** | அவர்கள் எங்கு இருந்து எடுத்து வந்தார்கள் என்பது பற்றி உங்களுக்கு நேரடியாக தெரியாது என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | நீங்கள் எத்தனை கையெழுத்து போட்டீர்கள்? |
| **பதில்** | 4 கையெழுத்துக்களை காவல் நிலையத்திலும், 4 கையெழுத்துக்கள் பார்வை மகஜரிலும் கையெழுத்து செய்தேன். |
| **கேள்வி** | மேற்கண்ட 4 பார்வை மகஜர்களில் உள்ள ஆயுதங்கள் எங்கெங்கு கைப்பற்றப்பட்டது என்பது பற்றி உங்களுக்கு நேரடியாக தெரியாது என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | போலீசார் தயார் செய்த ஒப்புதல் வாக்குமூலத்திலும், பார்வை மகஜரிலும் கையெழுத்து செய்தீர்கள் என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | காவல் நிலையத்தில் அச்சடிக்கப்பட்டு அதில்தான் நீங்கள் கையெழுத்து செய்தீர்கள் என்றால்? |
| **பதில்** | 4 பார்வை மகஜர்களிலும் சென்னை–திருச்சி பைபாஸ் ரோட்டில் வைத்து வாங்கினார்கள். எதிரிகள் கொடுத்த 4 ஒப்புதல் வாக்குமூலத்திலும் காவல் நிலையத்தில் வைத்து வாங்கினார்கள். |
| **கேள்வி** | அந்த 4 ஒப்புதல் வாக்குமூலத்திலும் எத்தனை தாள்களில் கையெழுத்து செய்தீர்கள்? |
| **பதில்** | 4 ஒப்புதல் வாக்குமூலத்திலும் அடுத்தடுத்து வாங்கி விட்டார்கள். ஆனால் ஒரே தினத்தில் வாங்கவில்லை. |
| **கேள்வி** | இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் உங்களை விசாரித்தார்களா? |
| **பதில்** | விசாரிக்கவில்லை. |
| **கேள்வி** | நீங்கள் ஒரு அரசு ஊழியர் என்பதால் இது போன்ற குற்ற வழக்குகளுக்கு |

| | |
|---|---|
| | நீங்கள் எங்கு பணிபுரிகிறீர்களோ அங்கு அருகில் உள்ள காவல் நிலையங்களில் இது போன்ற வழக்குகளில் அவர்கள் கேட்டு கொண்டதற்கிணங்க நீங்கள் கையெழுத்து போடுவீர்கள் என்றால்? |
| **பதில்** | சரியல்ல. |
| **கேள்வி** | நீங்கள் கையொப்பம் செய்த ஒப்புதல் வாக்குமூலங்களில் மற்றும் மகஜர்களில் நான் கையெழுத்து செய்தபோது உங்கள் உதவியாளரும் கையெழுத்து செய்தாரா என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | சென்னை–திருச்சி புறவழிசாலையில் வைத்து நானும், எனது உதவியாளரும் 4 மகஜர்களிலும் கையெழுத்து செய்தோம் என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | நீங்கள் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் சொன்னவாறு எங்கும் செல்லவில்லை என்றாலும், போலீசார் கேட்டு கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால்? |
| **பதில்** | சரியல்ல. |

**<u>மறுவிசாரணை</u>** : இல்லை.

திறந்த வெளி நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நேரடியாக என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சிக்கு படித்து காட்டி அவர் சரியென்று ஒப்புக்கொண்ட பின் இன்று 14.11.2025 என் முன்பு கையெழுத்து செய்தார்.

Sd.Thiru.S.Gopinatan,

இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,

திருச்சிராப்பள்ளி.

தேதி: 14.11.2025